
*ISSN No. : XXXXXXXXX* **அவையம் 1 (2017) p.no. 60 - 65**

புதிய அவையம்



# பௌராவின் பிறப்புக் கோட்பாடும் தமிழ்க்கதைப்பாடல் தலைவர்களின் பிறப்பும்

**முனைவர் ந. சோழன்,**
***உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,***
***தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், வேலூர்-635 601.***

**கட்டுரை பெறப்பட்டது:** *20.12.2016* **ஏற்கப்பட்டது:** *05.05.2017*

மனிதன் எப்போதும் எதிலும் பிறரைக் காட்டிலும் சிறந்தவனவாக விளங்க வேண்டும் என்ற வேட்கையினை உடையவன். இவ்வேட்கையின் விளைபொருளாகவே மனிதனை உயர்த்திப் பாடும் இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. தொடக்க காலத்தில் மனிதனைப் பிறரிடமிருந்து சிறப்பித்துக் காட்டும் பண்புகளில் தலைசிறந்து விளங்கியது வீரமே. இக்கருத்தினைத் தொடக்க கால இலக்கியங்கள் அனைத்தும் விளக்கி நிற்கின்றன. இதன் முக்கியத்துவத்தினை உணர்ந்த சி.எம்.பௌரா ஐரோப்பா,ஆசியா,ஆப்பிரிக்கக் கண்டங்களிலுள்ள சுமார் 30 நாடுகளின் வீரநிலை இலக்கியங்களை ஆய்விற்கு எடுத்துக் கொண்டு ஆராய்ந்தார். அவ் ஆய்வின் விளைவினைத் தனது வீரநிலைக் கவிதை (Heroic Poetry) என்ற நூலில் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளார். எந்தவொரு இலக்கியத்திற்கும் தொடக்கம் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. வீரநிலை இலக்கியத்தில் கதைத் தலைவர்களின் பிறப்பு என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கதைத் தலைவர்கள் பெரும்பாலும் கடவுள் அருளால் பிறந்தவர்களாகவோ தேவதைக்குப் பிறந்தவர்களாகவோ உள்ளமையை எடுத்துக்காட்டி, இதற்குக் காரணமாகக் கதைத் தலைவர்களின் புகழினைத் தொடக்கத்திலேயே எடுத்துக்காட்டுவதற்கும் அவர்கள் பிறரை விட வீரத்தில் மேம்பட்டவர்கள் என்பதை உணர்த்துவதற்குமே இவ்வுத்தி பயன்படுத்தப்படுகின்றது

புதிய அவையம்

எனக் கூறியுள்ளார்[1]. இதுவே அவரின் பிறப்பு குறித்த கோட்பாடாகும்.

பொதுவாகத் தமிழ்க் கதைப்பாடல்கள் கதைத் தலைவனின் பிறப்பிலிருந்து தொடங்கி அவனின் இறப்பு வரையிலான நிகழ்வுகளையோ அல்லது தலைவனின் வெற்றி, தோல்விகளையோ பேசிச் செல்கின்றது. அந்த வகையில் தமிழ்க் கதைப்பாடல்களான அண்ணன்மார்சுவாமி கதை, சேர்வைக்காரன் கதை, தோட்டுக்காரி கதை, ஈனமுத்துப்பாண்டியன் கதை, சின்னணைஞ்சான் கதை ஆகியவற்றுள் இடம்பெற்றுள்ள கதைத் தலைவர்களின் பிறப்பினைப் பௌராவின் பிறப்புக் கோட்பாட்டு அடிப்படையில் இக்கட்டுரை ஆய்கின்றது.

**அண்ணன்மார்சுவாமி கதை**

கொங்குப் பகுதியில் வழங்கப்பெறும் கதைப்பாடல் இது. இதன் கதைத் தலைவர்கள் பொன்னரும் சங்கரும் ஆவர். மேற்கண்ட கதைத் தலைவர்களின் பெற்றோர்களான குன்றுடையானும் தாமரையும் நெடுநாட்களாகக் குழந்தையில்லாமல் மிகுந்த வருத்தமுற்றுக் காணப்படுகின்றனர். தாமரையாள் குழந்தையில்லாத குறையை நினைத்து வருந்தி,

‘மாமன் மகனாரே
என்னைமாலையிட்ட மன்னவரே
பிள்ளையில்லாச் சோறு
எனக்குப் புழுவோட ஒண்ணாச்சு
மைந்தனில்லாச் சோறு
எனக்குமருந்தோட ஒண்ணாச்சு’

எனக் கூறுகின்றாள். இவ்விருவரும் பிள்ளை வேண்டித் தானதருமங்கள் செய்தும் பல்வேறு கோவில் தலங்களுக்குச் செல்வதுமாகவும் உள்ளனர். இவர்களின் பக்தியினை உணர்ந்த சிவன் பார்ப்பனர் வேடத்தில் வந்து,

பொன்னம்பலந்தனிலேபோய் நீ
தவமிருந்தால்
தன்னாசி கோவிலிலே
தவமிருந்து வரங்கேட்டால்
தன்னாசி மனமிரங்கி
சாமிவரங்கொடுப்பார்
என்று சொல்லி மறைந்து விடுகின்றார்.

சிவன் கூறியதைப் போலவே குன்றுடையானும் தாமரையும் பொன்னம்பலம் வந்து சிவபெருமானை வேண்டித் தவம் இருக்கின்றனர். பிறகு சிவனிடம் பிள்ளைவரம் வாங்கிப் பிள்ளை பெறுகின்றனர். அவர்களே கதைத் தலைவர்களான பொன்னரும் சங்கரும்.

**சேர்வைக்காரன் கதை**

திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்கிவரக் கூடிய கதைப்பாடல் இது. இதன் கதைத் தலைவர்கள் சின்ன பலவேசம் மற்றும் பெரிய பலவேசம் ஆவர். மேற்கண்ட கதைத் தலைவர்களின் பெற்றோரான இருளப்பனும் முத்தாயும் பல வருடங்களாகக் குழந்தையில்லாமல் வாடி வருகின்றனர். முத்தாயி தனக்குக் குழந்தையில்லாமையை நினைத்து,

என்ன செல்வமிருந்தாலும்
இழுக்கலாவோ என்கணவா
பெண்ணாகப் பிறந்ததனால்
பிள்ளையில்லாப் பாவியென்பார்

என்பருவமுள்ள பெண்கள்
எத்தனைபேர் பெற்றெடுத்தார்
இருபத்தொரு வயசாச்சே
இதுவரையும் மலடிருக்கப்
பழிவாவம் செய்தோமோ
பால்பசுவைக் கொன்றோமோ
எனப் புலம்புகின்றாள்.

பிறகு பிள்ளைவரம் வேண்டிப் பல தலங்களுக்கும் செல்கின்றாள். தானதருமங்கள் செய்கின்றாள். சிவனிடம் பிள்ளைவேண்டித் தவமிருக்கின்றாள். அவளது தவம்,

ஈஸ்பரனே பிள்ளைதாருமெனச் சொல்லி
இரங்கியவளிருந்தாள்
மன்றிலுள்ளோர்கள் அறியத் தவங்கள்
வருந்தியேநாற்பதுநாள்
மாதாந்தசேவையும் சேவித்து நின்றாள்
மதலையங் கில்லாமல்
என விளக்கப்படுகின்றது.

பின்பு குறத்தியை அழைத்துக் குறிகேட்கின்றனர். குறத்தியும் அவளது நிலையினை விரிவாக விளக்கி, நீ திருச்செந்தூர் சென்று தவமிருந்தாயானால் உனக்குப் பிள்ளைவரம் கிட்டும் எனக் கூறுகின்றாள். முத்தாயும் அவ்வாறே திருச்செந்தூர் சென்று,

தவமிருந்தாள் நாற்பதுநாள்
தையல் நல்லாள் நித்திரையில்
பண்டாரக் கோலமுடன்
பரமசிவன் திருமகனார்
வந்துமணிமண்டபத்தில்
மங்கைநல்லாளோடு உரைப்பார்
மயங்காதே முத்தாயி
மதலைதந்தேன் எனவுரைத்தார்

முருகனிடம் பிள்ளைவரம் பெற்ற முத்தாயி சின்னபலவேசம், பெரியபலவேசம் என்ற இரண்டு ஆண் பிள்ளைகளைப் பெறுகின்றாள். இவர்களே இக்கதையின் கதைத்தலைவர்கள்.

**தோட்டுக்காரி கதை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கிவரக் கூடிய கதைப்பாடல் இது. இதன் கதைத் தலைவி தோட்டுக்காரி ஆவாள். முட்டப்பதி என்னும் நாட்டினை ஆண்டு வரக்கூடிய கோனாண்டிராசன், அவன் மனைவி மந்திரப்பூமாலை ஆகியோர் குழந்தையின்மையால் மிகவும் வருந்துகின்றனர். மந்திரப்பூமாலை தனக்குச் செல்வம் மிகுதியாக இருந்தும் அவற்றை ஆளத் தனக்கு ஒரு குழந்தை இல்லையென்பதால்,

அம்புபட்ட மானானேன்
அலையிலிட்ட துரும்பானேன்
கொம்பிழந்த மந்தியைப்போல்
குழந்தையில்லாக் குறையானேன்
ஆடாத செக்கானேன் அரசிழந்த பதியானேன்
ஓடாத தேரானேன் ஊமைகண்ட கனவானேன்
மின்னிழந்த மஞ்சானேன்
வேரிழந்த மரமானேன்
காணாத கடலோடிக் கரைசேராக் கப்பலானேன்
வீணாக நானொருத்தி
வெறுமலடாய் இருக்கிறேன்;
என்று புலம்புகின்றாள்.

பிறகு தானதருமங்கள் பல செய்கின்றாள். பல திருத்தலங்களுக்குச் செல்கின்றாள். இறுதியில் குறத்தி ஒருத்தியினை அழைத்துக் குறிகேட்கின்றாள். அவள் உனக்குக் குழந்தைவரம் வேண்டுமானால் சிவனுக்குக் கோயில் கட்டித் தவம் செய்து வந்தாயானால் உனக்கு உறுதியாகக் குழந்தைவரத்தைச் சிவன் அருள்வார் என்கின்றாள். மந்திரப்பூமாலையும் அவ்வாறே செய்கின்றாள்.

பாலனுக்குத் தவசிபண்ணிப் பரமசிவம் தனைத்தொழுது
ஆலமுண்டோன் திருப்பாதத்தை அடிபணிந்துதானிருந்தார்
எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி இருந்தவளும் தான்புலம்பி
கண்துயறும் மாதுமின்னாள் கனவுகண்டாள் திருத்தேவி
மைவிழியாள் கண்ணதிலே (ஒரு) மாயக்கனா கண்டனளாம்

அக்கனவின் வழியாகத் தனக்குப் பிள்ளைவரம் கிடைத்ததை உணர்ந்த மந்திரப்பூமாலையும் கோனாண்டிராசனும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். விரைவிலேயே தோட்டுக்காரியை மந்திப்பூமாலை பெற்றெடுத்தாள். இவளே இக்கதையின் தலைவி.

**ஈனமுத்துப்பாண்டியன் கதை**

இது திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்கிவரக் கூடிய கதைப்பாடல். இக்கதைப்பாடலின் தலைவன் ஈனமுத்துப்பாண்டியன். இவனின் பெற்றோர்களான நாராயணனும் கரிப்பியும் நீண்ட நாட்களாகக் குழந்தை இல்லாமல் வருந்தி வருகின்றனர். கரிப்பி, குழந்தை வேண்டி முருகனை நினைத்துத் தவம் இருக்கின்றாள். இதனை,

குழந்தையில்லை என்றுசொல்லி
சுப்பிரமணியர் கோவில் போய்
மாதாந்தசேர்வை செய்யலுற்றாள்
குழந்தையில்லை என்றுசொல்லி
முந்தித்தவம் தானுமிருந்தாள்

என்ற அடிகள் விளக்கி நிற்கின்றன.

இவ்வாறு கரிப்பி தவமிருக்கும் வேளையிலே முருகன் அவளுக்குக் காட்சி தந்து,

பிறக்கிறது ஆண் குழந்தை
பேரு நல்லஈனமுத்து
என்று சொன்னாரே சுப்பிரமணியர்

முருகனின் அருள்படியே அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கின்றது. அவனே கதைத்தலைவனான ஈனமுத்து.

சின்னணைஞ்சான் கதை

திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்கிவரக் கூடிய கதைப்பாடல். இக்கதைத்தலைவன் சிவனணைஞ்சான். இவனது பெற்றோர் செங்கோட்டையினை ஆண்டு வரக்கூடிய செம்பவளராசன் - பொன்னுருவி ஆகியோர் ஆவர். இக்கதையில் பொன்னுருவி குழந்தையின்மையால் பல வருடங்களாக வாடி வருகின்றாள். தனக்குப் பிள்ளை பிறக்காததனை நினைத்து,

முன்செய்த தீவினையோ
முதல்வன் செய்ததுவோ

பின்செய்த
பொல்லாங்கோபிள்ளையில்லாமல்
போனதெல்லாம்
மதகரியும் வாள்படையும்
வையகம் உண்டாகிலென்ன
விதமுடைய பொன்னுமுத்தும்
வேண்டுமட்டுந் தேடிலென்ன
சதர்கோடிதிரவியங்கள்
தானுமிகப் படைத்தாலும்
மதலையில்லா வாழ்வதுதான்
வாழ்வதிலும் வாழ்க்கையில்லை
எனப் புலம்புகின்றாள்.

பின்பு தானதருமங்கள் செய்கின்றாள். பல திருத்தலங்களுக்கும் செல்கின்றாள். இறுதியில் குறத்தியை அழைத்துக் குறிகேட்கின்றாள். அவள் தென்காசியில் பாழடைந்த கோயிலொன்றைப் புனரமைத்துப் பூசைசெய்து வந்தால் உனக்கு உறுதியாகக் குழந்தை பிறக்கும் எனக் கூறுகின்றாள். பொன்னுருவியும் அவ்வாறே செய்து தவமிருந்து வருகின்றாள்.

அந்தவல்லவருந்
தவசைஆதிசிவன் தானறிந்து
கந்தமருங்குழலாளுக்குக்
கனவுகாணவேணுமென்று
குஞ்சிநல்லசடைபுரளக்
குறுமுனிபோல் வேசங்கொண்டு
சித்தாண்டார் வடிவாகத்
திருச்செவியில் சொல்லுவாராம்

இவ்வாறாகச் சிவன் கனவின் வழியாக வந்து அவளுக்குக் குழந்தை பிறக்கப் போகின்றது என்பதை உணர்த்த, அதையுணர்ந்த பொன்னுருவியும் செம்பவளராசனும் மகிழ்ச்சியடைகின்றனர். இறுதியில் அவர்களுக்கு மகனாகச் சிவனணைஞ்சார் பிறக்கின்றார். அவரே இக்கதையின் தலைவன்.

இதுவரை நாம் கண்ட கதைத்தலைவர்கள் அனைவரும் பௌரா குறிப்பிடுவதனைப் போன்றே கடவுள் அருளினால் பிறந்தவர்களாக உள்ளமை தெளிவாகின்றது. இது அவர்களின் புகழுக்குரிய முன்னடையாளமாகவும் விளங்குகின்றது. மேலும் பௌரா குறிப்பிடும் இத்தகைய பிறப்புடையவர்கள் வீரத்தில் சிறந்து விளங்குவார்கள் என்பதும் முழுக் கதையோட்டத்தினையும் நோக்கும்போது விளங்குகின்றது.

எடுத்துக்கொண்ட கதைப்பாடல்களின் கதையமைப்பானது,

- அண்ணன்மார்சுவாமி கதை - பொன்னரும் சங்கரும் தங்களுடைய எதிரிகளை வீரத்தால் வீழ்த்தி இறுதியில் விதிவசத்தால் மடிதல்.
- சேர்வைக்காரன் கதை - சின்னபலவேசமும் பெரியபலவேசமும் தங்களுடைய வீரத்தால் எதிரிகளை வீழ்த்தி இறுதியில் வஞ்சகத்தால் மடிதல்.
- தோட்டுக்காரி கதை - தன்னுடைய பேரழகே போருக்குக் காரணம் என்பதால் தீப்புகுதல்.
- ஈனமுத்துப்பாண்டியன் கதை - தன்னுடைய வீரத்தால் எதிரிகளை வீழ்த்தி இறுதியில் கள்ளக்காதலினால் வீழ்தல்.

- சின்னணைஞ்சான் கதை - சிவனணைஞ்சான் மிகுவீரனாக விளங்கி இறுதியில் கள்ளக்காதலினால் வீழ்தல்.

என்ற வண்ணம் அமைகின்றது. பௌரா குறிப்பிடுவதனைப் போன்றே ஆண் கதைத் தலைவர்களின் பிறப்பு உத்தியானது அவர்களை மிகுவீரர்களாகப் புனையப் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. அதுவே பெண்ணானவள் கதைத் தலைமையாக அமையும்போது அவளின் பிறப்பானது பிற பெண்களைக் காட்டிலும் பேரழகு மிக்கவள் என்பதைக் காட்ட மட்டும் பயன்படுத்தப் பட்டுள்ளமையையும் உணரமுடிகின்றது. உஸ்பெகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த அல்பமிஸ் *(Alpamysh)* என்ற வாய்மொழிக் காப்பியத்தின் தலைவியான பார்சினும் கடவுள் வரத்தினால் பிறந்து பேரழகியாக மட்டுமே விளங்கியதாகப் படைக்கப்பட்டுள்ளமை தோட்டுகாரியோடு ஒப்புநோக்கத்தக்கது. உலக மனிதன் நாடு, மொழி, இனம், பண்பாடு போன்ற பல்வேறு காரணிகளால் பிளவுபட்டு இருந்தாலும் அவனால் படைக்கப்படுகின்ற இலக்கியங்களுள் ஒருபுடை ஒப்புமையினையும் காணமுடிகின்றது. ஒரு கதைத் தலைவனின் பிறப்பில் தெய்வக் கூறுகளைத் தொடர்புபடுத்தி அக்கூறின் துணையோடு அவனின் வீரத்தினைப் பிறரை விடவும் உயர்த்திக்காட்டுதல் என்ற கூறு கதையாடலில் ஒரு பொதுக் கூறாகப் பயன்படுத்தப் பட்டுள்ளமையை இதன்வழி அறியமுடிகின்றது. 'சீன வீரநிலைப் பாடல்கள் மற்றும் ஐரோப்பிய காப்பியங்களை ஒப்பிட்டு ஆராய்ந்த மாயிசான் அவற்றுக்கிடையே சிலபண்புகளில் ஒப்புமைகளைக் கண்டார். இவ்வொற்றுமைக்குக் காரணம் மனிதமனத்தின் பொது அனுபவமே என்ற கருத்தினை அவர் முன்வைத்துள்ளமையும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது[2].

அடிக்குறிப்புகள்

1. *C.M.Bowra, Heroic Poetry, Pg.94-95.*

2. *Marie chan, Chinese Heroic poem and European epic, P.168.*